**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்**

முன்னிலை : திருமதி.த.மாலதி, பி.எஸ்.சி., பி.எல்.,
நீதித்துறை நடுவர், குமாரபாளையம்.

திருவள்ளுவராண்டு 2055 குரோதி வருடம் புரட்டாசி திங்கள் 02 ஆம் நாள்
2024 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 18 ம் நாள் புதன்கிழமை

**M.P. No. 08/2024 in D.V.C.No.7/2022**

-

திரு. கார்த்திகேயன், (வயது 35),
த/பெ. வேலாயுதம்,
க.எண்.66/80, 4 வது தெரு,
கருங்கல்பட்டி மெயின் ரோடு,
குகை, சேலம் மாவட்டம் 636 006.

... மனுதாரர்/1—ம் எதிர்மனுதாரர்

// எதிர் //

திருமதி. பாரதி, (வயது 32),
க/பெ.கார்த்திகேயன்,
க.எண்.28, மெம்பர் ராமசாமி தெரு,
தேவாங்கபுரம்,
பள்ளிபாளையம் அஞ்சல்,
குமாரபாளையம் வட்டம்,
நாமக்கல் மாவட்டம் – 638 006.

... எதிர்மனுதாரர் / மனுதாரர்

இம்மனு என்முன்னர் 16.09.2024 தேதியன்று இறுதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மனுதாரர்/1—ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. A.திருநாவுக்கரசு, B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.ரமேஷ், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**உத்தரவு**

இம்மனு மனுதாரரையும், எதிர்மனுதாரரையும் அவர்களுக்கு பிறந்த குழந்தை தக்ஷித்தையும் சென்னை பாரன்சிப் லேப் மரபணு சோதனை மூலம் DNA பரிசோதனை செய்து அதன் அறிக்கையை சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவு பிறப்பிக்க வேண்டி மனுதாரர்/1–ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:–**

மனுதாரர் அசல் மனுவில் எதிர்மனுதாரர் ஆவார். இந்த வழக்கில் எதிர்மனுதாரர் மனுதாரரின் மனைவி ஆவார். எதிர்மனுதாரர்/மனுதாரர் தாக்கல் செய்திருக்கின்ற D.V.C.No.7 of 2022 ல் படிவம் – I ல் 4 வது காலத்தில் Any order information regarding acts of Domestic violence against you or your childern என்ற காலத்தில் குறிப்பாக குறிப்பிட்டு இருக்கும் "இந்த குழந்தை எனக்கு அக்கா கணவருக்கு (நவநீதகிருஷ்ணன் அவர்களுக்கு) பிறந்தது தான் என கோபமாக கூறிவிட்டு பெற்றோர் வீட்டிற்கு வந்துவிட்டேன். நீதிமன்றத்தில் DNA பரிசோதனை செய்ய சொன்னாலும் நான் அதற்கு தயாராக உள்ளேன்" என்றும் கூறியிருக்கிறார்.

எதிர்மனுதாரர்/மனுதாரர் சேலம் குடும்ப நல நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விவாகரத்து மனு H.M.O.P. No.456/2021 ஆனது 12.01.2023–ல் Dismised for Default ஆகியிருக்கிறது. மனுதாரர், எதிர்மனுதாரரின் திருமணத்திற்கு உதவி செய்த கோவை பாட்டி அவர்களிடத்திலும் எதிர்மனுதாரர்/மனுதாரர் அவரது குழந்தை மாமா நவநீதிகிருஷ்ணனுக்கு தான் பிறந்தது என்று சொல்லி இருக்கிறார் மற்றும் அவர்களது சொந்தக்காரர்களிடத்திலும் எதிர்மனுதாரர்/மனுதாரர் அவரது குழந்தை மாமா நவநீதிகிருஷ்ணனுக்கு தான் பிறந்தது என்று சொல்லியிருக்கிறார்.

இப்படியாக மனுதாரரை அனைவரும் கேட்டதில் மனுதாரருக்கு மனநிலை பாதிப்பு ஏற்பட்டு அதற்கு மனுதாரர்/1ம் எதிர்மனுதாரர் மனநல மருத்துவர்,

சேலம் அரசு மருத்துவமனையில் தற்போது வரை சிகிச்சை செய்துகொண்டிருக்கிறார். இதன் காரணமாக மனுதாரர்/1ம் எதிர்மனுதாரரால் அவரது பணியை செய்ய முடியாததால் அவரை வேலையிலிருந்து நீக்கிவிட்டார்கள். மனுதாரர்/1ம் எதிர்மனுதாரர் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக மன நோயினால் பாதிக்கப்பட்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார். DNA Test செய்து குழந்தை யாருக்கு பிறந்தது என்று சொல்லிவிட்டால் மனுதாரர்/1ம் எதிர்மனுதாரரும் மேற்படி மனநோயில் இருந்து விடுபட்டு விடுவேன் என்று அவரது மனுவில் தெரிவித்திருக்கிறார்.

மேற்படி DNA Test செய்வதற்காக இந்நீதிமன்றத்தில் Crl.M.P.No.952/2023 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுவில் 25.03.2024-ம் தேதி உத்தரவு பிறப்பித்ததில் மேற்படி நீதிமன்ற உத்தரவுபடிக்கு நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சென்றதாகவும், ஆனால் மேற்படி அரசு மருத்துவமனையில் நீதிமன்ற ஆணையாளர் மூலம் வந்தால் தான் அவர்களால் DNA Test சாம்பில் எடுத்து மேற்படி நீதிமன்ற ஆணையாளரிடம் ஒப்படைக்க முடியும் மற்றும் மேற்படி ஆணையாளர் சென்னைக்கு சென்று The Deputy Director, DNA Division, Forensic Science Department, Mylapore, Chennai – 600 004 அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கூறியதன் பேரில் மற்றும் இது சம்மந்தமாக அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்க உத்தரவு செய்திருப்பதால் மனுதாரர்/1ம் எதிர்மனுதாரருக்கும், எதிர்மனுதாரர்/மனுதாரர் பாரதிக்கும், குழந்தைக்கும் DNA Test செய்ய இந்நீதிமன்றம் வழக்கறிஞர்/நீதிமன்ற ஆணையாளரை நியமித்து உத்தரவு பிறப்பிக்க வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டியதாகும். எதிர்மனுதாரர் தரப்பில் மனுவை அனுமதிக்க ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கப்படவில்லை. எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**4. தீர்வு :–**

அசல் வழக்கு எண். எம்.சி.07/2022ல், மனுதாரரான பாரதி தனக்கும், தனது குழந்தைக்கும் வாழ்க்கை பொருளுதவியாக ரூ.25,000/–மும், பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாக்கிய எதிர்மனுதாரர்களிடமிருந்து இழப்பீடாக ரூ.50,000/–மும், தற்போது வசித்து வருகின்ற வீட்டிற்கு மாத வாடகையாக ரூ.5,000/–மும் ஜீவனாம்சமாக கொடுக்க வேண்டும் என வழக்கு தொடர்ந்துள்ளார்.

மனுதாரர், எதிர்மனுதாரர் கார்த்திகேயனின் மனைவி என்றும், அந்த உறவுமுறையில் தன்னையும், தனது குழந்தையையும் பாதுகாத்துக்கொள்ள போதிய வருமானம் இல்லை என்றும், அதனால் ஜீவனாம்சம் கோருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் கார்த்திகேயன் இடை மனுவாக Crl.M.P.No.952/2023 மனுதாரராக இருந்து தாக்கல் செய்திருக்கிறார். இம்மனுவில் தனது மனைவி, அவரது குழந்தை அவருக்கும், அவரது அக்கா கணவர் நவநீதிகிருஷ்ணனுக்கும் பிறந்தது என்றும், நீதிமன்றத்தில் DNA பரிசோதனை செய்ய சொன்னாலும் தான் அதற்கு தயாராக உள்ளதாக கூறுவதாகவும் கூறியிருக்கிறார் என்றும், எனவே குழந்தை யாருக்கு பிறந்தது என்பதை நிரூபிக்க மரபணு பரிசோதனை (DNA Test) மூலம் பரிசோதனை செய்து அந்த அறிக்கையை சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வது அவசியமாகின்றது என்றும், இல்லாவிட்டால் தனக்கு ஈடுசெய்ய முடியாது இழப்பு ஏற்பட்டுவிடும் என்றும் மனுவில் சொல்லி வாதிடப்பட்டு DNA பரிசோதனை செய்ய நாமக்கல் தலைமை அரசு மருத்துவமனைக்கு மனுதாரர், எதிர்மனுதாரர் மற்றும் குழந்தை ஆகியோர் அனுப்பிவைக்கப்பட்ட நிலையில் மேற்படி மூவரையும் நீதிமன்ற ஆணையர் மூலம் ஆஜராகுமாறு கூறப்பட்டுள்ளதால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இதை அனுமதிக்க வேண்டுமென்று மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

எதிர்மனுதாரர் பாரதி தரப்பில் மனுவினை அனுமதிப்பதை பொறுத்து ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கப்படவில்லை. எனவே மனுதாரர் கார்த்திகேயனின் செலவிலேயே மரபணு பரிசோதனைக்கூடத்திற்கு அனுப்பி அறிக்கை பெறுவதற்கு அவருக்கு ஆட்சேபணை இல்லை என்றும் குறிப்பாக அவர் மரபணு பரிசோதனைக்கு தயாராக இருப்பதாகவும் கூறி வாதுரை செய்யப்பட்டது.

இருதரப்பு வாதங்களும் பரிசீலனை செய்யப்பட்டது. இம்மனுவில் மனுதாரர் கார்த்திக்கேயனுக்கும், எதிர்மனுதாரர் பாரதிக்கும் பிறந்த குழந்தை தக்ஷித்தின் பிறப்பை பொறுத்து அவரது மனைவி நிரூபிக்க வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டநிலையில், மரபணு பரிசோதனை செய்ய இரசாயன கூடத்திற்கு சென்று அறிக்கை பெற வேண்டும் என மனுதாரர் கார்த்திகேயன் தான் மனு செய்துள்ளார். எனவே மனுதாரரின் கோரிக்கையை ஏற்று நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து அவர் மூலம் மனுதாரரோடு அவரது மனைவி பாரதி மற்றும் இளவர் தக்ஷித் ஆகியோர்கள் மருத்துவ பரிசோதனைக்காக நாமக்கல் தலைமை அரசு பொது மருத்துவமனையின் டீன் முன்னிலையில் நேரில் ஆஜராகி, மரபணு அறிந்து கொள்ள அவர்கள் உரிய Blood Sample கொடுக்க வேண்டும் என்றும், மேற்படி பரிசோதனையில் Blood Sample பெற்ற பின்னர் சென்னைக்கு அவர்களை அழைத்து சென்று பரிசோதனை முடிந்து அவர்கள் தருகின்ற அறிக்கையினை பெற்றுக்கொண்டு வந்து நீதிமன்ற ஆணையர் இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதிக்கப்படடு, இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையராக வழக்கறிஞர் திரு. J. இரவீஸ், அவர்கள் நியமனம் செய்யப்பட்டு அவருக்கு ஊதியமாக ரூ.25,000/-ஐ மனுதாரர் கொடுக்கவேண்டும் என்றும், DNA Test க்காக சென்னை இரசாயன அறிவியல் கூடத்திற்கு கடிதம் அனுப்பி FTA Card பெற்று அதன்பின்னர் வழக்கறிஞர் உதவியோடு மனுதாரர் கார்த்திகேயன், எதிர்மனுதாரர் பாரதி, அவரது குழந்தை இளவர் தக்ஷித் ஆகியோர்களை நாமக்கல் தலைமை அரசு பொது மருத்துவமனையின் டீன் முன்னிலையில் மூவரையும்

ஆஜர்படுத்த வேண்டும என்றும், மேற்படி மருத்துவமனையின் டீன் தகுதி வாய்ந்த மருத்துவர் மூலம் DNA Test–க்கான Blood Sample எடுத்து வழக்கறிஞர் மூலம் இந்நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும் என்றும், மீண்டும் Blood sample பெற்ற பிறகு நீதிமன்ற ஆணையர், மனுதாரர், எதிர்மனுதாரர், இளவர் தக்ஷித் ஆகியோர்களை இந்நீதிமன்றம் நியமனம் செய்யும் தேதியன்று சென்னை இரசாயனக்கூடத்தில் மூவரையும் ஆஜர்படுத்த வேண்டும் என்றும், அதன்பின்னர் பதிசோதனை முடிந்து அந்த அறிக்கையினை பெற்று இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் என்றும், நீதிமன்ற ஆணையர் கட்டணமாக ரூ.25,000/–ஐ மனுதாரர் இந்நீதிமன்றத்தில் ஒரு மாதத்திற்குள் கட்ட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், மேலும் நீதிமன்ற ஆணையருக்கு மேற்படி சென்னை சென்றுவரும் போக்குவரத்து செலவினை மனுதாரர் கூடுதலாக ஏற்கவேண்டும என்று உத்தரவிடப்படுகிறது. ஆணையருக்கு கட்டணம் ரூ.25,000/– செலுத்த வாய்தா 19.10.2024.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்படடு இன்று 2024–ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 18–ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்) த. மாலதி, 18.09.2023,
நீதித்துறை நடுவர்,
குமாரபாளையம்.

உபயமனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் – இல்லை

(ஒம்) த. மாலதி, 18.09.2023,
நீதித்துறை நடுவர்,
குமாரபாளையம்.

//உண்மை நகல்//